RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்


DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-345 | 11 டிசம்பர் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ஓய்வுபெறும் ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் பிரதமர், நிதியமைச்சருக்கு உருக்கமாக நன்றி!



புதுடெல்லி, டிச.11

ரிசர்வ் வங்கியின் ஆளுநராக உள்ள சக்திகாந்த தாஸ் இன்று ஓய்வு பெற உள்ளதை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோருக்கு உருக்கமாக நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவுகளில், "ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இன்று நான் ஓய்வுபெற இருக்கிறேன். ஆதரவையும், வாழ்த்துகளையும் வழங்கிய உங்கள் அனைவருக்கும் நன்றி.

ரிசர்வ் வங்கியின் ஆளுநராக நாட்டுக்கு சேவை செய்ய எனக்கு இந்த வாய்ப்பை வழங்கி, வழிகாட்டி, ஊக்குவித்து வந்த பிரதமர் மோடிக்கு மிகவும் நன்றி. அவரது சிந்தனைகளாகலும், எண்ணங்களாலும் கிடைத்த பலன்கள் ஏராளம்.

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் நிலையான ஆதரவுக்கும் உறுதுணைக்கும் மனமார்ந்த நன்றி. நாட்டின் நிதி ஒருங்கிணைப்பு மிகச் சிறப்பாக இருந்ததால், கடந்த ஆறு ஆண்டுகளில் பல சவால்களைச் சமாளிக்க அது எங்களுக்கு உதவியது.

நிதித்துறை மற்றும் பொருளாதாரத்தில் பங்கு வகிக்கும் அனைவருக்கும் நன்றி. ரிசர்வ் வங்கிக்கு பல்வேறு யோசனைகளையும், கொள்கைக்கான பரிந்துரைகளையும் வழங்கிய நிபுணர்கள், பொருளாதார வல்லுநர்கள், தொழில் அமைப்புகள், சங்கங்கள், விவசாயம், கூட்டுறவு மற்றும் சேவைத் துறைகளில் உள்ள நிறுவனங்கள் ஆகியோருக்கு நன்றி.

ரிசர்வ்வங்கியின் ஒட்டுமொத்த குழுவுக்கும் மிகப்பெரிய நன்றி. முன் எப்போதும் இல்லாத, கடினமான காலகட்டத்தை நாம் ஒன்றாகச் சேர்ந்து வெற்றிகரமாக வழிநடத்தினோம். நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை நிறைந்த நிறுவனமாக ரிசர்வ் வங்கி இன்னும் உயரமாக வளரட்டும். உங்கள் ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்." என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "நான் ரிசர்வ் வங்கியின் ஆளுநராகவும் (ஆரம்ப மாதங்களில்) வருவாய் மற்றும் பொருளாதார விவகாரங்களின் செயலாளராகவும் பணியாற்றியபோது என் மீது நம்பிக்கையையும் உறுதியையும் வைத்திருந்த, அரவணைத்த மறைந்த அருண் ஜேட்லியை அன்புடன் நினைவு கூர்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

## டங்ஸ்டன் விவகாரம் குறித்து விவாதிக்கக் கோரி மக்களவையில் திமுக, காங்கிரஸ் நோட்டீஸ்



புதுடெல்லி, டிச.11

டங்ஸ்டன் விவகாரம் குறித்து விவாதிக்கக் கோரி மக்களவையில் திமுக, காங்கிரஸ் ஒத்திவைப்பு நோட்டீஸ் வழங்கியுள்ளது.

முன்னதாக நேற்று, மதுரை மாவட்டம் நாயக்கர்பட்டியில் மாநில அரசின் அனுமதி இல்லாமல் தனியார் நிறுவனத்துக்கு மத்திய அரசு வழங்கிய டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை ரத்து செய்ய கோரி, சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்ட தனி தீர்மானம் அதிமுக உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

நேற்று இந்தத் தனி தீர்மானம் மீது நடந்த விவாதத்தில் பேசிய முதல்வர் ஸ்டாலின், "நான் முதல்வராக இருக்கும் வரை நிச்சயமாக மத்திய அரசு இந்த திட்டத்தை கொண்டுவர முடியாது. அனுமதிக்க மாட்டோம். எதிர்க்கட்சிகள் பார்வையில் அலட்சியமாகவும், நாங்கள் தவறிவிட்டோம் என்றுகூட இருக்கலாம். ஆனால், எங்களுடைய பார்வையில் இந்த பிரச்சினையை சுட்டிக்கட்டி கடிதங்கள் எழுதியிருக்கிறோம். எந்த காரணத்தை கொண்டும் இந்த திட்டம் வருவதற்கு வாய்ப்பு இல்லை. அதனை தடுத்து நிறுத்துவோம். அப்படி ஒரு சூழ்நிலை வந்தால் முதல்வர் பொறுப்பில் நான் இருக்க மாட்டேன்." எனக் கூறியிருந்தார்.

அதிமுக மீது குற்றச்சாட்டு: மேலும் முதல்வர் தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்த பதிவில், "மதுரை மக்களுக்கு அ.தி.மு.க. செய்த துரோகத்துக்கு நாடாளுமன்ற ஆவணங்களே சாட்சி. பூசணிக்காயைக் கட்டுச்சோற்றில் மறைக்கவே முடியாது.

மதுரை டங்ஸ்டன் விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் அதிமுக செய்த துரோகம் வீடியோ ஆதாரங்களுடன் அம்பலமானதும், "நான் மசோதாவைத்தான் ஆதரித்தேன், டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ஆதரிக்கவில்லை" எனத் தம்பிதுரை மழுப்பி இருக்கிறார். அதிமுக ஆதரவில் நிறைவேறிய சட்டத் திருத்த மசோதாதான், டங்ஸ்டன் சுரங்கத்தை ஏலம் விடும் அதிகாரத்தை மாநில அரசிடம் இருந்து பிடுங்கி மோடி அரசிடம் கொடுக்கக் காரணமானது. அந்தச் சட்ட மசோதாவைத் திமுக எதிர்த்தது; அதிமுக ஆதரித்தது. டங்ஸ்டன் உள்ளிட்ட சில அரிய கனிமங்களை ஒன்றிய அரசு மட்டுமே ஏலம் விட முடியும் என்கிற சட்டத் திருத்தத்தைத்தான் தம்பிதுரை ஆதரித்தார்.

அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க தமிழ்நாடு அரசு முன்வரவில்லை. இதே நிலை பல மாநிலங்களில் நீடிப்பதால், ஒன்றிய அரசே ஏலம் விடுவதற்கான திருத்தச் சட்டத்தைத்தான் அதிமுக ஆதரித்தது. இதன் அடிப்படையில்தான் அரிட்டாப்பட்டி சுரங்க ஏலத்தை ஒன்றிய அரசு மேற்கொண்டது.

அதிமுகவின் தொடர் துரோகத்தின் புதிய அத்தியாயம் அம்பலமாகி இருக்கிறது. டெல்லியில் எதிர்க்க வேண்டிய இடத்தில் ஆதரித்துவிட்டு, இங்கே நாடகமாடுவது எடுபடாது. தம்பிதுரை ஆதரித்தது எந்தத் திருத்தத்தை? மாநில உரிமையைப் பறித்து ஒன்றிய அரசுக்கே அதிகாரம் வழங்குவதை அதிமுக ஆதரிப்பது பச்சைத் துரோகம் அல்லவா? இத்தனையும் செய்துவிட்டு, இங்கே நாடகமாடுவது யாரை ஏமாற்ற?

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் என்பார்கள். பழனிசாமி அவர்களின் புளுகும் புளுகுக்குப் புனுகு பூசும் நேர்த்தியும் எட்டு நொடிகூட நிலைப்பதில்லை. அவர் இனிமேலாவது உண்மைகளைப் பேசிப் பழக வேண்டும் என்று அக்கறையோடு கேட்டுக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், டங்ஸ்டன் விவகாரம் குறித்து விவாதிக்கக் கோரி மக்களவையில் திமுக எம்.பி. கனிமொழியும், காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூரும் ஒத்திவைப்பு தீர்மானம் நோட்டீஸ் வழங்கியுள்ளனர்.

## 'ஆதவ் அர்ஜுனா மனம் மாறுவாரா; திருமாவளவன் அணி மாறுவாரா?' தமிழிசை கேள்வி



சென்னை, டிச.11

விசிகவிலிருந்து அக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா 6 மாத கால இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் "ஆறு மாதத்திற்குள் ஆதவ் மனம் மாறுவாரா... அல்லது திருமா அணி மாறுவாரா.?" என்று தமிழக பாஜக மூத்த தலைவரும், தெலங்கானா, புதுச்சேரி முன்னாள் துணை நிலை ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னதாக, விசிக துணை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனாவை கட்சியிலிருந்து ஆறுமாத காலத்துக்கு இடைநீக்கம் செய்வதாக அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் நேற்று அறிவித்தார். கட்சியின் நலன்களை முன்னிறுத்தி, கட்சித் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர்கள் ஆகிய மூவர் உள்ளடங்கிய தலைமை நிர்வாகக் குழுவில், ஆதவ் அர்ஜுனா மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திருமாவளவன் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு எதிர்வினையாற்றியிருந்த ஆதவ் அர்ஜுனா, "துணைப் பொதுச் செயலாளர் என்ற பொறுப்பு கடிதம் கிடைக்கப் பெற்றபோது என்ன மனநிலையில் இருந்தேனோ, அதே மனநிலையில் இப்போது வெளியாகியுள்ள எனது இடைநீக்கம் குறித்த கடிதத்தையும் எதிர்கொள்கிறேன். அம்பேத்கர், பெரியார், அண்ணா ஆகியோரின் கருத்துகளை உள்வாங்கி அரசியல் பயணத்தைத் துவங்கினேன். அந்தக் கொள்கைகளின் வழியில் எனது பயணம் எப்போதும் தொடரும்." என்று பதிலளித்திருந்தார்.

இந்நிலையில் ஆதவ் விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள தமிழிசை சவுந்தரராஜன், "ஆதவ் அர்ஜுனா ஆறு மாதத்திற்கு இடை நீக்கம்... அண்ணன் திருமா அறிவிப்பு.. ஆறு மாதத்திற்குள் ஆதவ் மனம் மாறுவாரா... அல்லது திருமா அணி மாறுவாரா.?" என்று தனது சமூகவலைதளப் பக்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

விசிகவின் அரசியல் போக்கு பற்றி பல்வேறு ஊகங்கள் அதிகரித்து வரும் நிலையில் தமிழிசை இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார். விசிக பற்றியும் ஆதவ் அர்ஜுனா பற்றியும் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.

## திருவண்ணாமலை தீபத் திருவிழா மலை உச்சியில் தீபம் ஏற்றப்படும் சட்டப்பேரவையில் அமைச்சர் சேகர்பாபு உறுதி






சென்னை, டிச.11

"இந்தாண்டு திருவண்ணாமலை தீபத் திருவிழாவில் 40 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 350 கிலோ எடை கொண்ட கொப்பரை மற்றும் திரிகளை மேலே எடுத்துச் செல்ல வேண்டும். 40 டன் கொண்ட சுமார் 450 கிலோ நெய்யும் மேலே எடுத்துச் செல்ல வேண்டும். எனவே இந்த இரண்டு பணிகளுக்கும் சேர்த்து எவ்வளவு மனித சக்தி அதற்கு பயன்படுத்த வேண்டுமோ, அத்தனை பேரை பயன்படுத்தி, எந்தவித அசம்பாவிதமும் நேராமல், தீபத் திருவிழாவை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார்." என்று சட்டப்பேரவையில் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையின் இரண்டாவது நாள் கூட்டம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தொடங்கியது. முன்னதாக கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு துறை வாரியான அமைச்சர்கள் பதிலளித்தனர்.

அப்போது பேரவைத் துணைத் தலைவரும், உறுப்பினருமான பிச்சாண்டி, வரலாறு காணாத மழை திருவண்ணாமலையில் பெய்ததைத் தொடர்ந்து மலையில் மூன்று இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு, 7 பேர் உயிரிழந்தனர். அவர்களது குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

கார்த்திகை தீபம் என்பது அண்ணாமலையார் கோயிலின் முக்கியத் திருவிழா. தீபத் திருநாளன்று மலையில் ஆண்டுதோறும் 2000 பேர் மலையேறுகிறார்கள். இந்தமுறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுமா? அதுதொடர்பாக அரசு என்ன திட்டங்களை வகுத்துள்ளது? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்து இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது: சங்க காலம் முதலே நடந்து வரும் திருவிழாக்களில் ஒன்றாக திருவண்ணாமலை தீபத் திருவிழா இருந்து வருகிறது. இந்தாண்டு தீபத் திருவிழாவில் 40 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் அடிப்படையில், துணை முதல்வர் கடந்த அக்.18ம் தேதி, நேரடியாக திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் ஆய்வு செய்தார்.

அதன்பிறகு தொடர்ச்சியாக 6 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், நான் பங்கேற்ற 2 கூட்டங்கள், தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் கூட்டங்கள் நடந்தன. அண்மையில் பெய்த பெருமழையின் காரணமாக திருவண்ணாமலையில் மண்சரிவு ஏற்பட்டது. அப்பிரச்சினைகளை தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் தீர்த்துவைத்தது.

திருவண்ணாமலை தீபத் திருவிழாவின்போது, மலையின் உச்சியில் ஏற்றப்படுகிற கொப்பரைத் தீபம் என்பது இன்றியமையாத ஒன்று. சான்றோர்கள் காலத்தில் இருந்து நடைபெறும் இந்த விழா தடைபடக்கூடாது என்று தமிழக முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார். அந்த உத்தரவின்படி, புவியியல் நிபுணர் குழு சரவணபெருமாள்ராஜா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. 8 பேர் கொண்ட அந்த குழு கடந்த 7ம் தேதி முதல் 9ம் தேதி வரை மூன்று நாட்கள் ஆய்வு செய்துள்ளனர்.

அந்த ஆய்வு அறிக்கை முதல்வரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 350 கிலோ எடை கொண்ட கொப்பரை மற்றும் திரிகளை மேலே எடுத்துச் செல்ல வேண்டும். 40 டன் கொண்ட சுமார் 450 கிலோ நெய்யும் மேலே எடுத்துச் செல்ல வேண்டும். எனவே இந்த இரண்டு பணிகளுக்கும் சேர்த்து எவ்வளவு மனித சக்தி அதற்கு பயன்படுத்த வேண்டுமோ, அத்தனை பேரை பயன்படுத்தி, எந்தவித அசம்பாவிதமும் நேராமல், தீபத் திருவிழாவை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார். எனவே, சூழ்நிலைக்கு ஏற்றதுபோல மனித சக்தியை பயன்படுத்தி தீபத்திருவிழா நடத்தப்படும்." என்று பதிலளித்தார்.

## சர்வதேச திரைப்பட விழாவுக்கு ரூ.85 லட்சம் நிதி அமைச்சர் சாமிநாதன் வழங்கினார்



சென்னை, டிச.11

டிச.12ம் தேதி தொடங்கவுள்ள 22வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவுக்கு, தமிழக அரசின் சார்பில் ரூ.85 லட்சத்துக்கான காசோலையை, சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்திய திரைப்பட திறனாய்வுக் கழகத்தின் பொதுச் செயலாளரும், சென்னை சர்வதேச திரைப்பட விழா இயக்குநருமான ஏ.வி.எம்.சண்முகத்திடம் வழங்கினார். உடன் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன், எஸ்.செல்வராஜ் உள்ளிட்டோர்.

சென்னை: சென்னையில் நடைபெறும் 22வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவுக்கு தமிழக அரசின் சார்பில் ரூ. 85 லட்சம் நிதியை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். தமிழக அரசு சார்பில், ஆண்டுதோறும் சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு ரூ.75 லட்சம் நிதயுதவி வழங்கப்பட்டு வந்த நிலையில், முதல்வரின் ஆணையின்படி, 2023ம் ஆண்டு ரூ. 85 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டும் வரும் 12 முதல் 19ம் தேதி வரை சென்னையில் நடைபெறும் 22வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவுக்கு தமிழக அரசின் சார்பில் ரூ. 85 லட்சத்துக்கான காசோலையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்திய திரைப்படத் திறனாய்வுக் கழகத்தின் பொதுச் செயலாளரும், சென்னை சர்வதேசத் திரைப்பட விழா இயக்குநருமான ஏ.வி.எம்.சண்முகத்திடம் நேற்று வழங்கினார்.

இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலர் வே.ராஜாராமன், செய்தித்துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன், எஸ்.செல்வராஜ், இந்திய திரைப்பட திறனாய்வுக் கழகத்தின் தலைவர் சிவன் கண்ணன் மற்றும் துணைத் தலைவர் ஆனந்த் ரங்கசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

## அயனாவரம் மாணவியை பாலியல் கொடுமை செய்தவர்களை என்கவுன்ட்டர் செய்தால் கூட மக்கள் எதிர்க்கமாட்டார்கள்: நடிகை கஸ்தூரி



சென்னை, டிச.11

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நடிகை கஸ்தூரி, தெலுங்கர்களுக்கு எதிராக பேசியதாக கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் ஜாமீனில் வெளியே வந்த அவர், எழும்பூர் காவல் நிலையத்தில் கையெழுத்திட்டு வருகிறார். இந்நிலையில், நேற்று எழும்பூர் காவல் நிலையம் வந்த நடிகை கஸ்தூரி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

காவல் நிலையத்தில் கையெழுத்திடுவதில் தளர்வு அளித்த நீதிமன்றத்துக்கும், காவல்துறைக்கும் நன்றி. ஆதவ் அர்ஜுனாவை வேண்டாம் என எந்த கட்சியும் சொல்லமாட்டார்கள். அனைத்து கட்சிகளுக்கும் மார்ட்டின் குடும்பம் நிதி வழங்கியிருக்கிறது. ஆதவ் அர்ஜுனா அரசியல் ரீதியாக பேசுவதால் சில மோதல்கள் ஏற்படலாம். அதேநேரம் அரசியலில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.

அயனாவரத்தில் ஏற்கெனவே நடந்த சம்பவத்தையை நான் இன்னும் மறக்கவில்லை. மக்களும் மறக்கவில்லை. அதற்குள் அதேபோல், மற்றொரு சம்பவம் அயனாவரம் மாணவிக்கு நேர்ந்துள்ளது. மனநலம் குன்றிய குழந்தையை கடவுளின் குழந்தையாக பார்க்க வேண்டும். அந்த வலி எனக்கு தெரியும். தவறு செய்யாதவர்களை தனிப்படை வைத்து தேடும் போலீஸார், இதுபோன்ற சம்பவத்தில் ஈடுபட்டவர்களை பிடிக்க எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. குற்றவாளிகள் வெளியே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் சட்டஒழுங்கு எந்த அளவில் இருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. தமிழகத்தில் நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை. சிறப்பு குழந்தைக்கு தமிழகத்தில் பாதுகாப்பு இல்லை என்றால், எங்கே போய் சொல்வது? இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டவர்களை என்கவுண்ட்டர் செய்தால் கூட மக்களும் அதை எதிர்க்கமாட்டார்கள். இவ்வாறு அவர் கூறினார்.



சிவகங்கை அரண்மனை வாசல் முன்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விவசாய மாநில தலைவர் குணசேகரன் தலைமையில் , சிபி மாவட்ட செயலாளர் சாத்தையா முன்னிலையில் மத்திய அரசை கண்டித்து நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் இன்று நடைபெற்றது. அதானி ஊழலை பாராளுமன்ற கூட்டுக் குழுவில் விசாரிக்க வேண்டும். மணிப்பூர் கலவர சூழல் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் விஷம்போல் ஏறும் விலைவாசி வேலையில்லா திட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் கோஷமிட்டனர்.

# தாம்பரத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கல்வெட்டை திறப்பு -பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்




தாம்பரம், டிச.11

தாம்பரம் தமிழ்நாடு துணை முதலமைச்சரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி கிழக்கு தாம்பரம் 5வது மண்டலம் 48வது வார்டு மாமன்ற உறுப்பினரும் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம் அவர்கள் ஏற்பாட்டில் கல்வெட்டை தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா திருகரங்களால் திறந்து வைத்து அதன் பின்னர் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, மண்டல குழு தலைவர்கள், பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன், டி.காமராஜ், ஆகியோர் கலந்து கொண்டனர் உடன் பகுதி செயலாளர் செம்பாக்கம் சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் கொடி தாமோதரன், சசிகலா கார்த்திக், பகுதி கழக நிர்வாகிகள் 48வது வட்ட செயலாளர் செழியன், வட்ட செயலாளர்கள், சீனிவாச குமார், ரமேஷ்பாபு, வட்ட நிர்வாகிகள் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# காட்பாடி சன்பீம் பள்ளியில் புக்டோப்பியா நூலகம் திறப்பு விழா




காட்படி டிச.11

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி சன்பீம் சி.பி.எஸ்.சி. மேல்நிலைப் பள்ளி விஷனரி ஹால் அரங்கத்தில் புக்டோப்பியா நூலகம் திறப்பு விழா, சயன்ஸ்பீம் ஒலிம்பியாட் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் விழா, அறிவியல் கண்காட்சி விருது வழங்கும் விழா, ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர் இராணிப்பேட்டை புதிய சி.எம்.சி. இணை இயக்குநர் வாஸ்குலர் சர்ஜரி துறை பேராசிரியர் மற்றும் துறை தலைவர் டாக்டர். தீபக் செல்வராஜ் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

சன்பீம் பள்ளியின் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் விருந்தினர்கள் என திரளானோர் கலந்துகொண்டு நூலக திறப்பு விழாவை சிறப்பித்தனர்.

# நயினார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு





ராமநாதபுரம் டிச.11

ராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்டப்பணிகளை பார்வையிட்டு மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் பெருங்கர் ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன் மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடி அவர்களின் கல்வித்திறன் குறித்து ஆய்வு செய்தார். மேலும் ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் 2 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து பெருங்கர் ஊராட்சியில் ரூ.2.97 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டு வருவதை பார்வையிட்டு அதன் தரத்தன்மை குறித்து ஆய்வு செய்ததுடன் சாலையின் இரு பக்கங்களிலும் பலப்படுத்தி நன்றாக அமைத்திட வேண்டுமென பொறியாளர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பெருங்க;ர் ஊராட்சியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி அலுவலக கட்டடம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு உரிய காலத்திற்குள் பணிகளை முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் அதே வளாகத்தில் ரூ.10.93 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டடம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் வயலூர் ஊராட்சியில் ரூ.4.42 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டடம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன் கட்டடத்தின்; மேல் பகுதிக்கு சென்று அதன் உறுதித்தன்மை குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அங்கன்வாடி மையத்தில் உள்ள உட்சுவர்களில் குழந்தைகள் பார்த்து பயன்பெறும் வகையிலான ஓவியங்கள் அமைத்திட வேண்டுமென பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். மேலும் குழந்தைகளுக்கு நாள்தோறும் சுகாதாரமான முறையில் உணவுகள் வழங்குவதை உறுதி செய்திட வேண்டும் என அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு பதிவேடுகளை வைத்து எடை மற்றும் உயரம் குறித்து அளவீடு செய்து சரிபார்த்தவுடன் எடை குறைவான குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் எடுத்து உரிய ஊட்டச்சத்துகளை வழங்குவதுடன் தாய்மார்களுக்கு அவ்வப்போது தக்க அறிவுரைகளை வழங்கி குழந்தைகளை ஆரோக்கியமாக பாதுகாத்திட அங்கன்வாடி பணியாளர்கள் உறுதுணையாக இருந்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் நயினார் கோயில் வட்டார வளர்ச்சி அலுவலர் திருநாவுக்கரசு ஊராட்சி ஒன்றிய பொறியாளர்கள் கணபதி சுப்ரமணியன் ஜெயந்தி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மங்கலம் சாலையில் குளத்துப்பாளையம் பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பணி தீவிரம்



திருப்பூர், டிச.11

திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு உட்கோட்டத்திற்குட்பட்ட மாநில நெடுஞ்சாலையான திருப்பூர் சோமனூர் சாலை கி.மீ.6/2 மற்றும் 6/4 பகுதியில் (குளத்துப்பாளையம் அருகில்) பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கிணங்க மேற்படி பகுதியில் போக்குவரத்து செறிவு அதிகமாக உள்ளதாலும் மழைக்காலங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் சாலையின் ஓடுதளத்தில் தேங்குவதால் மழைநீர் தேங்காவண்ணம் அப்பகுதியில் இரண்டு சிறுபாலங்கள் அமைக்கும் பணி துரித வேகத்தில் நடைபெற்று வருகிறது.

மிக விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதாக உதவிக் கோட்டப் பொறியாளர் விஜயகுமார், இளநிலைப்பொறியாளர் ராஜேஷ் தெரிவித்தனர்.




திருப்பூர் மாவட்டம் மாநகராட்சி மண்டலம்4 பலவஞ்சிய பாளையம் பகுதியில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் மாநகராட்சியின் சார்பில் ஃபெஞ்சால் புயல் நிவாரண நிதி பொருட்களை திருவண்ணாமலை மாவட்டத்திற்கு கொண்டு செல்லும் வாகனங்களை மாநகராட்சி மேயர் தினேஷ் குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார்.உடன் துணை ஆணையாளர் சுந்தர்ராஜன், சுகாதார குழு தலைவர் மற்றும் 57வது வார்டு மாம் என்ற உறுப்பினர் கவிதா மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் 50 ஆண்டுகளாக அடிப்படை வசதி இல்லாத கிராமம்! மனு அளித்த பெண்கள்




மானாமதுரை டிச.11

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வேதியரேந்தல் , செங்கோட்டை காலணி பகுதியில் 120 ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்தவர்கள் வசித்து வருகின்றனர் இப்பகுதியில் 50 ஆண்டு காலமாக சாலை வசதி ஏற்படுத்தப்படவில்லை மேலும் அரசியல் தலைவர்கள் வாக்கு சேகரிக்க மட்டுமே வந்துள்ளனர்.

மற்றபடி எங்கள் கிராமத்தில் எந்தவிதமான வசதியும் ஏற்படுத்தி தரவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தங்களின் குழந்தைகள் பள்ளி கல்லூரி சென்று வருவதற்கு இரண்டு கிலோமீட்டர் கண்மாய் கரை வழியாகவே செல்வதாகவும் சரியான நேரத்தில் இந்த தூரத்தைக் கடந்து அரசு பேருந்து பிடிக்க வேண்டும். நேரம் தவறினால் மீண்டும் வீட்டுக்கு செல்கின்றனர்.

தங்கள் பகுதிக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டி பெண்கள் ஒரு அணியாக சேர்ந்து நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தங்கள் பகுதிக்கு ஒரு விடிவு வரவேண்டும் என்பதற்காகவே இப்பகுதிக்கு அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டி செங்கோட்டை காலனி பகுதியைச் சேர்ந்த பெண்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் மனு அளித்துள்ளனர். பெண்களாக அளித்த மனுவிற்கு மாவட்ட ஆட்சியர் தகுந்த நடவடிக்கை உடனடியாக செயல்படுத்துவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. இத்தனை ஆண்டு காலமாக அடிப்படை வசதியை பூர்த்தி செய்யாத




ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் நெடுஞ்சாலைத் துறையினர் ஆக்கிரமிப்பு வைத்துள்ள பகுதிகளை நேற்று அகற்றினர்...





சிவகங்கை மாவட்டம் மிக்கேல் பட்டணம் சந்தனம் பிள்ளை மகன் மகள் பேரன் பேத்திகளால் கடந்த 8ஆம் தேதி அமலலோற்பவ அன்னையின் விண்ணேற்ப நாள் திருவிழா திருப்பலி சீரும் சிறப்புடனும் நம் பங்குதந்தை மற்றும் மறைமாவட்ட பொருளர் தந்தை ஆரோன், மறைமாவட்ட செயலர் டெல்லஸ்,மறைமாவட்ட சொத்து பராமரிப்பு தந்தை பிரிட்டோ மண்ணின் மைந்தர் கிளமெண்ட் இவர்களால் புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் அமைந்துள்ள அன்னைமரியாளின் கெபியில் அனைவரின் முன்னிலையில் ஆடம்பர திருப்பலி நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இந்நிகழ்வு நடைபெற்றது..

## மதுபோதையில் ஆட்டோ ஓட்டி வந்த ஓட்டுநரின் வாகனம் பறிமுதல்! கன்னியாகுமரி போக்குவரத்து போலீசார் நடவடிக்கை

கன்னியாகுமரி, டிச.11



கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம் உத்தரவுப்படி காவல்துறை காவல் துணை கண்காணிப்பாளர் மகேஷ் குமார் மேற்பார்வையில் கன்னியாகுமரி போக்குவரத்து காவல் ஆய்வாளர் பிரபு போக்குவரத்து உதவி ஆய்வாளர் ஜெயபிரகாஷ் மற்றும் போக்குவரத்து சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பால்கனி - .முருகேசன்

ஆகியோர் கன்னியாகுமாரி சிலுவைநகர் பகுதியில் வாகன தணிக்கையின் போது மது போதையில் ஆட்டோ ஓட்டி வந்த ஆட்டோவை பறிமுதல் செய்து ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்து ரூ15000 அபராதம் விதித்தனர்.பின்னர் ஆட்டோ ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்வதற்கு வட்டார போக்குவரத்து அலுவலருக்கு பரிந்துரை செய்யப்பட்டது..




தாய்லாந்து நாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான உலக அளவிலான இளைஞர் விளையாட்டுப் போட்டியில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவி அமுல்யா ஈஸ்வரி 1500 மீட்டர், 800 மீட்டர், ஓட்டப்போட்டியில் இரண்டு தங்கப்பதக்கமும், 400 மீட்டர் ஓட்ட போட்டியில் வெண்கல பதக்கமும் மற்றும் கல்லூரி மாணவர் வருண் குண்டு எறிதலில் வெள்ளிப் பதக்கமும், வட்டு எறிதலில் வெண்கல பதக்கமும் பெற்றுள்ளனர் அதனைத் தொடர்ந்து மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.செள.சங்கீதாவை வீரர், வீராங்கனை ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.உதவி ஆட்சியர் (பயிற்சி) வைஷ்ணவி பால் மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் இளைஞர் நல அலுவலர் ராஜா ஆகியோர் உடன் உள்ளனர்.



சிவகங்கை மாவட்ட அமைச்சர் கபாடி கழகம் சார்பில் சப் ஜூனியர் சிறுவர் 55கிலோ பொறுக்குத் தேர்வு காரைக்குடி கோவிலூர் ஆண்டவர் உடற்கல்விகள் கல்லூரியில் வருகின்ற 15/12/2024 அன்று காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது. சிவகங்கை மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமே அனுமதிப்படுவர் மேற்கண்ட விவரங்கள் அறிய மாநில அமைச்சூர் கபாடி கழகம் துணைத் தலைவர் நாகராஜன் 8248910958, சேர்மன் வேலு 9487110398, செயலாளர் கல்யாணசுந்தரம்9789421725, பொருளாளர் பாண்டி 9659061310 தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது..



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனித உரிமைகள் தின உறுதிமொழியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மு.கோட்டைக்குமார் கலந்துகொண்டு உறுதிமொழி வாசிக்க அனைத்து அரசு அலுவலர்களும் உறுதிமொழியேற்றுக்கொண்டனர்.

## சிவகங்கை கேந்திர வித்யாலயா பள்ளியில் வாசிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



சிவகங்கை டிச.11



சிவகங்கை கேந்திர வித்யாலயா பள்ளியில் வாசிப்பின் அவசியம் குறித்து விழா நடைபெற்றது விழாவிற்கு பள்ளியின் முதல்வர் மனோஜ் சர்மா தலைமை தாங்கினார் முன்னிலை வகித்தார் பள்ளியின் நூலகர் முன்னிலை வகித்தார்.

வாசிப்பின் அவசியம் குறித்து மாணவ மாணவிகள் மத்தியில் நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு அரசின் சிறந்த நூல் விருதாளர், கலை நன்மணி, எழுத்தாளர் அ.ஈஸ்வரன் கலந்து கொண்டு மாணவ மாணவியர்கள் புத்தகம் வாசிப்பது அவர்களது வாழ்க்கையை எப்படி உயர்த்தும் என்பதை விளக்கி பேசினார் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி அலுவலக கண்காணிப்பாளர் ரமேஷ் கண்ணன் புத்தகத்திற்கும் மனித வாழ்விற்கும் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறது என்பதை உவமைகளோடு விளக்கிப் பேசினார் மாவட்ட மைய நூலக கனகராஜன் அவர்களும் கலந்து கொண்டு புத்தக வாசிப்பின் மேன்மையை மாணவ மாணவிகளுக்கு எடுத்து கூறினர். இவ்விழாவில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நூலக நண்பர்கள் திட்டத்தை சார்ந்த ரமேஷ் கண்ணா நூலக உறுப்பினர் அடையாள அட்டைகள் அவர் சார்பாக ஏற்பாடு செய்தார் இதில் ஏராளமான பள்ளி மாணவ மாணவியர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் முடிவில் பள்ளி மாணவி நன்றி கூறினார்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 க்கு உட்பட்ட 14,16,18 ஆகிய வார்டுகளில் தெரு தெருவாக சென்று மண்டல தலைவர் அண்ணன் இ. ஜோசப் அண்ணாதுரை அவர்கள் ஆய்வு மேற்கொண்டார் கடந்த மழையின் போது பாதாள சாக்கடை குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் வெளியேறுவதை சரி செய்யப்பட்டு விட்டதா மழைநீர் கால்வாய்கள் ஒழுங்காக தூர்வாரப்பட்டுள்ளதா பழுதடைந்த சாலைகளில் தற்காலிக செப்பனிடம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு என ஆய்வு மேற்கொண்டு முடிக்காத பணிகளுக்கு உடனடியாக தீர்வு காண முடியும் மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் அப்பொழுது உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.நெடுஞ்செழியன், மங்கையர் திலகம் ராஜ்குமார், பிரேமலதா பண்டேரிநாதன், மற்றும் வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் உடன் இருந்தார்கள்..

## பெரும்பாக்கத்தில் உதயநிதியின் பிறந்தாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கல் - திமுக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்

சோழிங்கநல்லூர் டிச 11





சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் ஆணைக் கிணங்க, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த்ரமேஷ் ஆலோசனைப் படி, நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு திமுக அரசின் சாதனை விளக்க பொதுகூட்டம் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு பெரும்பாக்கம் பாரதி நகர், எழில் நகரில் மாவட்ட பிரதிநிதி, பெரும்பாக்கம் கழகச் செயலாளருமான கே. குமார் தலைமையில் புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன் முன்னிலையில் மகளிர் அனைவருக்கும் புடவைகள் பரிசுப் பொருட்களை வழங்கி சிறப்பாக நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் ஆத்தூர் வெங்கடேசன், ஜெ.ஸ்ரீபநாதன் சிறப்புரையாற்றினார்கள். இவ்விழாவில் புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் ,மாவட்ட, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி தலைவர்கள் ,வார்டு உறுப்பினர்கள், திமுக உறுப் பினர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## பழனியை அடுத்த ஆயக்குடி பேரூராட்சி சார்பாக ஏரியா சபை கூட்டம்

பழனி டிச11



திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட 10வது மற்றும் 11வது வார்டு மற்றும் 14வது மற்றும் 15வது வார்டு ஆகிய வார்டுகளில் ஏரியா சபா வார்டு கமிட்டி கூட்டம் நடைபெற்றன.

தொடர்ந்து 10வது வார்டு கவுன்சிலரான மேனகா ஆனந்தன் 11வது வார்டு கவுன் சிலரான ஜெயசித்ரா சின்னத் துரை மற்றும் 14வது வார்டு கவுன்சிலர் பாண்டியம்மாள் மணிவண்ணன் 15 வது வார்டு கவுன்சிலர் பிரமலதா வீரசெந்தில் ஆகியோர் தலைமையில் ஏரியா சபா வார்டு கமிட்டி கூட்டம் நடைபெற்றன.

இந்த கூட்டத்தில் தங்கள் வார்டு பகுதியில் பேரூராட்சியின் மூலம் செய்துள்ள திட்டங்கள் பற்றியும் செய்யப்பட உள்ள திட்டங்கள் பற்றியும் பொதுமக்களின் குறைகள் பற்றியும் கலந்தாய்வு செய்தனர்.

மேலும் தங்கள் வார்டுகளில் குப்பையில்லா நகரை உருவாக்குவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் குப்பைகளை கண்ட கண்ட இடங்களில் போடக்கூடாது குப்பைத்தொட்டியை பயன் படுத்த வேண்டும் சாக்கடைகள் பேரூராட்சி மூலம் தூர்வாரப் பட்டு வரும் நிலையில் பொது மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கருத்துக்களை ஏரியா சபா வார்டு கமிட்டி கூட்டத்தில் கலந்து ஆய்வு செய்தனர்.

மேலும் இந்நிகழ்வில் பேரூராட்சி அதிகாரிகள் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் பெண்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு ஏரியா சபா வார்டு கமிட்டி கூட்டம் நடைபெற்றன.

## சத்துவாச்சாரியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

வேலூர் டிச.11




வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பிஜேபி அரசின் மக்கள் விரோத கொள்களை கண்டித்தும், மக்கள் நலனை காத்திடும் கோரிக்கைகளை முன்வைத்து, வேலூர் மாநகர செயலாளர் எம்.ஜீவா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. ஜி.லதா சிறப்புரையாற்றினார், கண்டனப் பேருரை: மாநில குழு எல்.மணி, மாவட்ட பொருளாளர் காவேரி, மாவட்ட துணை செயலாளர் துரைசெல்வம், இராணிப்பேட்டை மாவட்டம் பொறுப்பாளர் ஆர்.ராஜேந்திரன், கணியம்பாடி ஒன்றிய செயலாளர் டி.அருள் குமார் மற்றும் மாவட்ட குழு பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் என 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கொடிகளை கையில் ஏந்தி பாஜக அரசுக்கு எதிரான மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மனித உரிமைகள் நாள் உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா. தலைமையில் அனைத்துறை அலுவலர்கள் எடுத்துக் கொண்டனர். உதவி ஆட்சியர்(பயிற்சி) வைஷ்ணவி பால், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) சந்திரசேகர் ஆகியோர் உடன் உள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் 54 வது வார்டு வெற்றி நகர், கன்னியம்மன் கோவிலின் குளத்தை சுத்தப்படுத்தி அக்குளத்தைசுற்றி நீண்ட காலமாக தேக்கத்தில் உள்ள வேலைகளை விரைந்து முடிக்குமாறு 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார் உடன் கழக பேச்சாளரும் முன்னாள் மாவட்ட பிரதிநிதி எஸ்ஜி.கருணாகர பாண்டியன், பொறியாளர் தங்கதுரை, வட்ட நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடன்இருந்தனர்.

## ஃபெஞ்சல் புயல் பாதித்த விழுப்புரம் மாவட்டத்திற்கு வேலூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் நிவாரண பொருட்கள் அனுப்பி வைப்பு




வேலூர் டிச.11

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து, ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்திற்கு வேலூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ரூ.12,44,650/ மதிப்பிலான உணவு பொருட்கள், போர்வைகள் உள்ளிட்ட அவசரகால அடிப்படை தேவை நிவாரண பொருட்களின் கனரக வாகனத்தை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கொடியசைத்து அனுப்பி வைத்தார். இந்நிகழ்வின் போது மாநகராட்சிமேயர், மாநகராட்சி ஆணையர், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில்குமரன், மண்டல குழு தலைவர்கள் வீனஸ் நரேந்திரன், யூசுப்கான், வெங்கடேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்தையன், வட்டாட்சியர்கள் சரவணன், ரமேஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில், அனைத்து அரசு அலுவலர்கள் மனித உரிமைகள் தின உறுதி மொழியை எடுத்துகொண்டனர். இந்நிகழ்வின்போது ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில்குமரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்தையன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர் ஜெயஜோதி மற்றும் பலர் உடனிருந்தனர்.

## பத்திரம் காணவில்லை

19.05.1995ம் ஆண்டு மதுரை காமராசர் சாலை தென்புறம் கீழ்மாத்தூர் எண் 1. நீர்.சந்து கதவிலக்கம் 10. ஏ என்ற முகவரியில் வசித்து வந்த லேட் அன் . வெங்கட்டராமய்யர் மனைவியும் என்பாட்டியுமான (லேட்) **A.V.** சரஸ்வதியம்மாள் அவர்களால் என் தகப்பனாரும் மேற்படி சரஸ்வதியம்மாள் மகனுமான (லேட்) **A.V.** ரவீந்திரன் அவர்களுக்கு மதுரை சப்டி சார்பதிவகம் (**TSNO**)1974/2. ஆவண எண் 2257/1995 (புத்த கம்1இல்3242 தொகுதி பக்கம்240(முதல் 244வரை ) 19.05.1995 அன்று தான செட்டில்மெண்ட்டாக எழுதி பதிவு செய்யப்பட்ட வீட்டடி மனையின் பத்திரம் போடி பஸ் ஸ்டாண்ட்இல் 01.12.2024 அன்று காணாமற்போய்விட்டது கிடைக்கப் பெற்றோர் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு உதவ வேண்டுகின்றேன்காவல் துறை புகார் பதிவு எண் (**CNK** 24585986 (**dt**1.12.2024)

**R.கார்த்திகேயன்,**

தபெ.**A.V.**ரவீந்திரன்,

**D.No:**14 கி கருப்பசாமி கோவில் 4வது தெரு போடிநாயக்கனூர் 625513

**Mob** 8438396770

## கோவையில் உள்ள SNS கல்லூரியில், தேசிய அளவிலான சிலம்பம் போட்டி



தேனி.டிச11

தேனி மாவட்டம் சார்பாக போடியில் இருந்து (8.12.2024) கோவையில் SNS கல்லூரியில் தேசிய அளவிலான சிலம்பம் போட்டி நடைப்பெற்றது. போடியிலிருந்து மாஸ்டர் காளிதாஸ் தலைமையில் ஜூனியர், சீனியர், சூப்பர் சீனியர் என மூன்று பிரிவுகளில் மொத்தம் 44 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஒற்றை கம்பு வீச்சு, இரட்டை கம்பு வீச்சு, சுருள்வால் வாள் வீச்சு, வேல் கம்பு, மான் கொம்பு என அனைத்து பிரிவுகளிலும் 67 போட்டிகளில் கலந்துகொண்டு 64 கோல்டு மெடல்கள், 3 சில்வர் மெடல்கள், வென்றதால் இதன் மூலம் போடியில் இயங்கி வரும் ஆதி போகர் சிலம்பம் பயிற்சி கூடம் தேசிய அளவிலான சிறந்த அணியாக தேர்ந்தெடுக்கப்பட்டது. மாணவர்களுக்கு சான்றிதழ், கோப்பை, கேடயம் ஆகியவை வழங்கப்பட்டது ஆதி போகர் சிலம்பம் பயிற்சி கூடம் சார்பில் போடி sisam School யில் பாராட்டு விழா நடைபெற்றது.

## மதுரை மாநகர மேயர் தலைமையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்

மதுரை: டிச 11




மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் பொது மக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் இந்திராணி பொன்வசந்த் ஆணையாளர். ச.தினேஷ் குமார், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொது மக்கள் குறைதீர்க்கும் முகாமில் வரிதிருத்தம் வேண்டி 16 மனுக்களும், பாதாளச்சாக்கடை இணைப்பு, சாலை வசதி மற்றும் அடிப்படை வசதி வேண்டி 41 மனுக்களும், காலிமனை வரி விதிப்பு வேண்டி 2 மனுக்களும், சுகாதாரம் தொடர்பாக 3 மனுக்களும், ஆக்கிரமிப்பு தொடர்பாக 3 மனுக்களும் என மொத்தம் 65 மனுக்கள் பொதுமக்களிடம் இருந்து மாண்புமிகு மேயர் அவர்களால் நேரடியாக பெறப்பட்டது.

இம்முகாமில் துணை மேயர் .தி.நாகராஜன், மண்டலத்தலைவர் வாசுகி, உதவி ஆணையாளர் பார்த்தசாரதி, மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், நிர்வாக அலுவலர் மணியன், செயற் பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர் ஆரோக்கிய சேவியர், உதவி வருவாய் அலுவலர் லோகநாதன், கண்காணிப்பாளர் லெட்சுமி, உதவிப் பொறியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை எல்லீஸ் நகர் மேம்பாலம் அருகே ரயில்வே அணுகு சாலையில் மரக்கன்றுகள் நடும் விழா



மதுரை: டிச 11

புவி வெப்பமாவதை தடுப்பதற்காக ரயில்வே துறை பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக மதுரை ரயில் நிலைய மேற்கு நுழைவாயிலில் எல்லீஸ் நகர் மேம்பாலம் அருகே உள்ள ரயில் நிலைய அணுகு சாலையில் 20 மரக்கன்றுகள் நடப்பட்டது.

இந்த மரக்கன்றுகள் ரயில்வே இயந்திரவியல் மற்றும் சுற்றுச்சூழல் பிரிவு அதிகாரிகள், ஊழியர்கள் முயற்சியில் நடப்பட்டுள்ளது. மரக்கன்றுகள் மற்றும் தடுப்பு வேலிகள் டிவிஎஸ் குழுமம் சார்பாக அவர்களது பெரு நிறுவன சமூக நல நிதி வாயிலாக வழங்கப்பட்டது.

மரக்கன்றுகள் நடும் நிகழ்வில் ரயில்வே ஊழியர்கள், ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள், டி.வி.எஸ் குழும அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பகுதியில் நியாய விலை கடைகளை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் நேரில் சென்று நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

## கல்லல் பகுதியில் ரேஷன் அரிசி கடத்தல் சுற்றி வளைத்த சி.எஸ்.சி.ஐ.டி குழுவினர்

கல்லல் டிச11



மதுரை மார்க்கெட்டில் சிற்றுண்டி கடைகளுக்கு உணவு தயார் செய்வதற்காக சிவகங்கை மாவட்டம் கல்லல் இளையான்குடி பகுதியில் அரிசியை சேகரித்து வந்ததாக வந்த புகாரின் அடிப்படையில் சிவகங்கை சி.எஸ்.சி.ஐ.டி காவல் துணை ஆய்வாளர் தேபாகர் தலைமையில் காவலர்கள் நேற்று அதிகாலை நேரத்தில் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது கல்லல் தெப்பக்குளம் பகுதியில் சந்தேகத்துக்கிடமான வாகனம் ஒன்று நின்றது அதை சோதனை செய்ததில் 38 பிளாஸ்டிக் பைகளுடன் 30 கிலோ மொத்தம் 1140 கிலோ அரிசி இருந்தது தெரியவந்தது. வாகனத்தை இயக்கி வந்த மதுரை கீழ்மதுரை அர்ஜன் காலனி சௌந்தரராஜன் மகன் சின்னதுரை (32), மதுரை கமராபுரம் ராஜு மகன் ஆல்பர்ட் (23) வாகனம் மற்றும் இருவரை கைது செய்து அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நீதிபதி முன் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைத்தனர்..

## மின்தடை அறிவிப்பு தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகம் அறிவிப்பு




மதுரை, டிச.11

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வில்லாபுரம் 110/3311 கி.வோ. துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவிருப்பதால் 11.12.2024 (புதன்கிழமை) காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை கீழ்காணும் பகுதிகளில் மின் தடை ஏற்படும் எனதெரிவிக்கப்படுகிறது.

மின் தடை ஏற்படும் பகுதிகள்

வில்லாபுரம் ஹவுசிங் போர்டு திதி ரோடு வில்லாபுரம் கிழக்கு பகுதிகள் சின்னக்கண்மாய், தென்றல்நகர், மணிகண்டன் நகச், மயானரோடு, அகஸ்தியர்தெரு, அன்புநகர், காளியம்மன்கோவில், காமராஜர்தெரு, அருப்புக்கோட்டை மெயின்ரோடு ஜெயவிலாஸ் முதல் வெற்றி தியேட்டர்வரை. வில்லாபுரம் ஜிழிபிஙி புதுநகர், அருப்புக்கோட்டை மெயின் ரோட்டில் வெற்றி தியேட்டரிலிருந்து வால்கி தெரு வரை, லிரி துளசிராம்தெரு, மீனாட்சிநகர், கணபதிநகர், நல்லதம்பி தோப்பு, காவேரிதெருக்கள், செந்தமிழ்தெருக்கள், சௌடேஸ்வரியம்மன் கோவில், தாமரை தெரு, வைகை தெரு, குரு மஹால் பகுதிகள், ஓம்சக்தி நகர், பரமேஸ்வரி அம்மன் கோவில் தெரு, ஜெயபாரத் சிட்டி 1-2, வாசுகி தெருநந்தகோபாலன் தெரு, நேதாஜி தெரு ஆகிய பகுதிகளில் மின்தடை ஏற்படும்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161